Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C.** 153/2022 |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW**10 |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | பொன் முத்துராமலிங்கம் |
| Father/Husband Name | : | சக்திவேல் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.12.2022.

முதல் விசாரணை–

நான் இராமநாதபுரம் எம்எஸ்கே நகரில் வசித்து வருகிறேன். நான் மார்க்கெட்டிங் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன பனையடியானை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து போட்டேன். அதில் என்ன எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. பார்வைமகஜரில் உள்ள என்னுடைய கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து போட்டேன். அதில் என்ன எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. அத்தாட்சியில் உள்ள என்னுடைய கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.3. என் முன்னிலையில் போலிசார் எதையும் கைப்பற்றவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டது)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> –

போலிஸ் விசாரணையில் கடந்த 05.03.2021 ம் தேதி இரவு 08.45 மணிக்கு நானும், மீனாட்சி சுந்தரம், பாண்டி என்வரும் இராமநாதபுரம் புதிய பேருந்துநிலையம் அண்ணாசிலை அருகே உள்ள ஐயங்கார் பேக்கரிக்கு அருகில் நின்று கொண்டிருந்தோம் என்றும் அப்போது கேணிக்கரை ஆய்வாளர்கள் குற்ற எண்.150/2021 இதச பிரிவுகள் 294(பி), 323, 302 வழக்கின் சம்பவ இடத்தை எங்கள் முன்பு பார்வையிட்டு பார்வைமகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும் பார்வைமகஜரில் நானும், பாண்டி என்பவரும் கையெழுத்து செய்தோம் என்றும் பின்பு இரவு 09.30 மணிக்கு சம்பவ இடத்தில் கிடந்த இரத்தம்பட்டமண் சிறிதளவு, இரத்தம்படாத மண் சிறிதளவு ஆகியவற்றை ஆய்வாளர் அத்தாட்சியில் எங்கள் முன்பு கைப்பற்றினார் என்றும் அந்த அத்தாட்சியில் நானும், பாண்டி என்பவரும் கையெழுத்து செய்தோம் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C.** 153/2022 |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW**9 |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | சங்கர் |
| Father/Husband Name | : | சுப்பையா |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.12.2022.

முதல் விசாரணை–

நான் எம்எஸ்கே நகரில் வசித்து வருகிறேன். நான் பழைய இரும்பு வியாபாரம் வாங்கி விற்பனை செய்து தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன பனையடியான் எனக்கு தம்பி முறை வேண்டும். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 05.03.2020ம் தேதி மாலை 05.00 மணிக்கு நான் இரும்பு வியாபாரம் பார்த்துவிட்டு அண்ணாசிலை வழியே வரும்போது பனையடியானை ஆஜர் எதிரிகள் 3 பேரும் கட்டை, கம்பி, அருவாள் ஆகியவற்றால் தாக்கும்போது பார்த்தேன். அதன் பிறகு நான் சென்றுவிட்டேன். பின்பு மாலை 06.00 மணியளவில் பனையடியான் தம்பி ரவி என்பவர் எனக்கு போன் மூலம் தகவல் சொன்னதின் பேரில் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு நான் சென்றேன். அங்கு பனையடியான் இறந்துவிட்டதாக சொன்னார்கள். நான் இறந்துபோன பனையடியானை பார்த்தேன். இறந்தநிலையில்

இருந்தார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை.